கவிதை மொழிபெயர்ப்பில் நேரிடும் சிக்கல்கள்

(Problems encountered while translating poems)

1. முன்னுரை

கவிதைகளை மொழிபெயர்ப்பது கடினம்; அவை மொழிபெயர்க்கயிலாத தன்மையைக் கொண்டுள்ளன. சிலர் கவிதைகள் மொழிபெயர்க்கப்படும் போது அவை அதன் உள்ளார்ந்த தரத்தை இழக்கும் என்றும் மற்றும் சிலர் கவிதை பெரும்பாலும் மொழிபெயர்ப்பிற்குப் பொருந்தக்கூடியது என்றும் கருதுகின்றனர். சில கவிதைகள் இயல்பாகவே மொழிபெயர்ப்புக்குப் பொருந்தாத கட்டமைப்பைக் கொண்டுள்ளன. இதுபோன்ற கவிதைகளை வேறு எந்த மொழியிலும் மொழிபெயர்ப்பு செய்ய இயலாது. சில சமயங்களில் கவிதையில் வலுவான எதுகை, மோனை, சந்தம் காரணமாக சிக்கல் ஏற்படலாம். ஒரு கண்டிப்பான தனிப்பட்ட அல்லது மொழி சார்ந்த கவிதை மொழிபெயர்ப்புகளை அனுமதிக்காது அல்லது அதற்கு மொழிபெயர்ப்பு தேவைப்படாது. கவிதை மேம்பட்ட தன்மையை கொண்டிருக்கும் போது, அனுபவங்களைப் பற்றிய நமது முக்கியமான மற்றும் அற்பமான கருத்துக்களை கவிதை உயர்த்த முயற்சிக்கும் போது மொழிபெயர்ப்பிற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் இத்தகைய கவிதைகளின் மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஏராளமான பிரச்சினைகளை உருவாக்கலாம்.

கவிதை இல்லாமல் எந்த மொழியும் இல்லை என்ற போதிலும் மற்றும் கவிதை மொழியைக் கட்டுப்படுத்தும் மரபுகள் எல்லா மொழி பேசுபவர்களுக்கும் நன்கு தெரிந்திருந்தாலும் இதன் தனித்துவங்களை வேறு மொழியில் மறு ஆக்கம் செய்வது மிகவும் கடினம்.

உருவகங்கள், பழமொழிகள், மரபுத்தொடர்கள், சொற்றொடர்களின் என்பனவும் மொழிபெயர்ப்பாளக்கு சிக்கல்களைத் தரும்; ஏனென்றால் அவற்றிற்கு நிகரன்களைக்

கண்டுபிடிப்பது கடினம். ஒரு மொழியில் வெளிப்படுத்தப்படும் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் மற்றொரு மொழியிலிருந்து வேறுபடுகின்றன. எனவே, கவிதையில் வெளிப்படுத்தப்படும் கலாச்சாரங்களும் பழக்கவழக்கங்களும் பெரும்பாலும் மொழிபெயர்ப்பில் ஒரு பெரிய தடையாக உள்ளன.

இந்தப் பின்னணியில் பாரதிதாசனின் சில மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகளை எடுத்துக் கொண்டு கவிதையின் மொழிபெயர்ப்பில் உள்ள நுணுக்கங்களை நாம் காணப் போகிறோம்.

2. பாரதிதாசனின் படைப்புகளின் மொழிபெயர்ப்புசார் சிக்கல்கள்

பாரதிதாசன் படைப்புகளின் மொழிபெயர்புச் சிக்கல்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் பட்டியலிடப்படலாம்:

1. மொழியியல் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்
2. பண்பாட்டுக் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்
3. அழகியல் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்
4. உணர்ச்சிக் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்
5. தனிப்பட்ட பண்பை மொழிபெயர்ப்பதில் சிக்கல்
6. மூலமொழிக்கு நம்பிக்கையாக இருப்பதில் சிக்கல்

2.1. மொழியியல் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்

இங்கே மொழிபெயர்க்க இயலாத் தன்மை ஒரு பரந்த பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் அனைத்து சாதாரண கவிதை அம்சங்களும் அடங்கும்.

2.1.1. முறையான கட்டமைப்பை மொழிபெயர்ப்பதில் சிக்கல்

ஒரு கவிதையின் தோற்றமானது மொழிபெயர்ப்பிலிருந்து வேறுபட்டது என்பதில் ஐயம் இருக்க இயலாது. ஆனால், பாரதிதாசனின் மூலக் கவிதைகளை அவற்றின் மொழிபெயர்ப்புடன் ஒப்பிடுகையில் தெரியும் முக்கியமான வேறுபாடு வடிவம், தோற்றம், எழுத்துக்களின் தோற்ற வடிவத்தின் அழகியல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உணர்ச்சி அனுபவங்கள் ஆகியவற்றின் மாற்றமாகும். இவை தவிர்க்க இயலாதன; எனென்றால் மொழிபெயர்ப்பின்போது மூல மொழியியின் எழுத்துமுறை, அதன் விளைவான மூல மொழியின் ஒலியனியன் அமைப்பு ஆகியன முறையே இலக்குமொழி எழுத்துமுறை மற்றும் ஒலியனியல் அமைப்பு ஆகியவற்றால் இடம்பெயர்க்கப்படுகின்றன. மொழிபெயர்ப்பில் வரிகளின் எண்ணிக்கை கூட பெரும்பாலும் அதிகரித்துள்ளன. எடுத்துக்காட்டாக, பெண்குழந்தைக்குத் தாலாட்டு என்ற 28 வரிகள் கொண்ட கவிதை முருகன் அவர்களால் (1994: 31-31A) ஆங்கிலத்தில் 46 வரிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு மொழிபெயர்ப்பில் நீளம் மற்றும் எழுத்து வடிவத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டுகின்றது; இது கண்டிப்பாகக் கவிதை வாசகரின் மீது முதல் காட்சித் தாக்கத்தை ஏற்படுத்தும். பத்திகளின் எண்ணிக்கை கூட மாறுபடலாம்.

சில நேரங்களில் ஒரு மொழிபெயர்ப்பாளர் மூல நூலில் தரப்படாத தகவலைக் கூடுதலாகத் தரலாம் அல்லது புனரமைக்கலாம். இதனால் மூலத்திலிருந்து மொழிபெயர்ப்பு விலகிநிற்கும். தாங்கப்பாவின் பின்வரும் மொழிபெயர்ப்பானது இந்தக் கூற்றை எடுத்துக்காட்டும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
வானவீதியில் வந்து திரிந்து தென்னங் கீற்றுப் பொன்னூஞ்சல் ஆடிச்	Sweeping past the clouds in sweet sunshine

சோலையினின்று சாலையில் மேய்ந்து வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!	She roams about the sky at will, Swings on the swaying coconut fronds Frisks and gambols in the woods And picks up grains by the roadside Heaven and earth belong to her

மூல மொழி ஒழுங்குமுறையில் எதுகை, மோனை, தொடை, அடி போன்றவற்றிகு ஒரு குறிப்பிட்ட மதிப்பு நிலை இருக்கலாம். மொழி அமைப்புகள் ஒன்றுக்கொன்று மிக வேறுபட்டு இருப்பதன் காரணமாக இரண்டு மொழிகளில் கவிதை அம்சங்கள் ஒரே மாதிரியாக மறுவாக்கம் செய்யப்பட்டிருந்தாலும், அவற்றின் மதிப்பின் நிலை ஒத்ததாக இருக்கும் என்று கூற இயலாது. பெரும்பாலான நேர்வுகளில் இது முற்றிலும் மாறுபட்ட நிகழ்வுகளாக மாறும். பின்வரும் கவிதை மேற்கூறிய செய்தியை எடுத்துக்காட்டும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
பார் பார் பொன்னிளங் காலையில் பூத்த சுடர்க் கதிர்பார்! இன் இள வேனிலில் இன்ப மலர்ச்சியைப் பார்!	Do Look at (them) (Murugan, 1994:179-180) Look at the tender rays of the sun glittering That marks the early morn’s golden hue! Look at the spectacle of joyous bloom around That mark the lovely pre-summer days!

2.1.2. **சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதில் சிக்கல்**

சொல்லுக்குச் சொல்லை மொழிபெயர்ப்பது, சில வேளைகளில் பயனுள்ளதாக இருந்தாலும், மிகுந்த எச்சரிக்கையுடன் செய்யப்பட வேண்டும். சில நேரங்களில் ஒரு மொழிபெயர்ப்பாளர் சொற்றொடர் அல்லது கூடுச்சொற்கள் மூலம் தெரிவிக்கப்படும் மரபுப் பொருளைப் புரிந்துகொள்ளாமல் சொல்லுக்குச்சொல் மொழிபெயர்ப்பைச் செய்வர். பின்வரும் வரிகளின் மொழிபெயர்ப்பு மேற்கூறிய கூற்றை விளக்கும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
கிழக்குப் பெண் விட்டெறிந்த கிளிச்சிறைப் பருதிப் பந்து	The parrot winged ball of Phoebes cast by the woman of the East

கிளிச்சிறை என்பது "கிளியின் சிறகின் நிறத்தில் இருக்கும் தங்கம், நான்கு வகையான தங்கங்களில் ஒன்று" என்று பொருள்படும். மொழிபெயர்ப்பாளர் இந்த வெளிவட்டக் கூட்டைப் பொருள்கோள் செய்வதில் தவறுகின்றார்.

2.2. **கலாச்சாரக் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்**

கலாச்சார வேறுபாடு மொழிபெயர்ப்பு நிகரன்களை அடையாளம் காண்பதில் சிக்கலை ஏற்படுதுகின்றது. மூலமொழிக் கவிதை அது எழுதப்பட்டிருக்கும் கலாச்சார மற்றும் சமூக பின்னணியில் வலுவான நிலைப்பாடு கொண்டிருந்தால் இலக்கு மொழியானது வேறுபட்ட கலாச்சார மற்றும் சமூக பின்னணியைச் சார்ந்தது என்ற நிலையில் மொழிபெயர்ப்பு சரியாகச் செய்தியை வெளிப்படுத்தாது போகும். பின்வரும் மொழிபெயர்ப்பானது இந்தக் கூற்றை எடுத்துக்காட்டும்.

பாரதிதாசனின் கவிதை	மொழிபெயர்ப்பு
பூரியில் ஒருநாள் நானக் பூதேவர் எனநடக்கும் ஆரியன் ஒருவன் தன்றன் அகல்விழி மூக்கை மூடி நேரில் வருதல் கண்டார் நேர்படும் கோலத்திற்குக் கோணினார்.	One day Nanak saw in Puri One Aryan with closed eyes and covered nose, Walking towards him as the God of the Earth Why in such a pose he should appear, he asked.

2.3. அழகியல் கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்

அழகை பொதுவான அளகைகள் மூலம் அளவிட முடியாது என்ற காரணத்தால் ஒரு மொழியிலிருந்து அழகியல் உணர்வை மற்றொரு மொழிக்கு மொழிபெயர்ப்பது சிக்கலானது. பின்வரும் பத்தி பரமேஸ்வரனின் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு மொழியர்ப்பிலிருந்து மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. மூலமொழியில் காணப்பட்ட அழகியல் உணர்வானது இலக்குமொழிச் சொற்கள், அவற்றின் வரிசைமுறை மற்றும் நடை இவற்றின் தேர்வு காரணமாக மொழிபெயர்ப்பில் இழக்கப்படுகிறது.

பாரதிதாசனின் கவிதை	மொழிபெயர்ப்பு
இருளின் பகலாடை இரவாடை விண்முதல் மண் வரைக்கும் கண்ணிலே காண்பேன்: நீயோ அடிக்கடி உடையில் மாற்றம்	Admire I your body Spreading from earth to sky Alter you your apparel So often O darkness!

பண்ணுவாய் இருளே உன்றன் பகல் உடை தங்கச்சேலை வெண்பட்டில் இராச்சேலைமேல் வேலப்பா டென்ன சொல்வேன்!	Gold saree your diurnal Dress is; O what filigree Work on the white silk on Your nocturnal saree!

முருகன் அவர்களின் (1994: 173-174) பின்வரும் மொழிபெயர்ப்பையும் அழகியல் கூறுகளை மொழிபெயர்ப்பதைப் பற்றிய மேற்கூறிய செய்தியை எடுத்துக்காட்டுவதற்கு மேற்கோளாகக் காட்டலாம்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
விண்மீன்கள் வானத்து நீலப் பட்டாடை- அதில் வாரி இறைத்த முத்துக்கள்! மேனி சிர்த்திடும் கண்டால் - அவை விண் மீன்கள் என்று சொல்லுவார்கள்! மீன் என்று சொல்லுவதேனோ? - அவை மின்னிடும் காரணம் தானோ! நீர்நிலை மீன்கள் நம் மீன்கள் - அவை நீலவானக் கடல் மீன்கள்!	The Star The blue-hued silken spread in the sky And the pearls strewn all over! A spectacle thrilling it is And they go by the name ‘stars’! Why are they called stars? Is it because they sparkle and shine? They are ‘fishes’ of the blue-hued ocean of the sky.

2.4. உணர்ச்சி கூறுகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்

ஒரு கவிதைக்கும் அதன் மொழிபெயர்ப்பிற்கும் இடையிலான வேறுபாடு கருத்தாக்கக் கட்டத்தில் இருந்து தொடங்குகிறது. ஒரு கவிஞர் ஒரு குறிப்பிட்ட விஷயம் அல்லது அனுபவத்தைப் பற்றி எழுதுகிறார்; ஏனெனில் அவருடைய ஆழ்ந்த புலனுணர்வு அவரை ஒரு வாய்மொழி வெளிப்பாட்டைக் கொடுப்பதற்கு வலுவாக அவரைத் தூண்டுகின்றது. எனவே, ஒரு கவிஞர் உண்மைகள் மற்றும் அனுபவங்கள் பற்றிய அவரது சொந்த உணர்ச்சி, கற்பனை அல்லது அறிவார்ந்த ஐயத்தை வெளிப்படுத்த முயற்சிக்கிறார். இந்த மூலப்படைப்பு மொழிபெயர்ப்பாளரை ஊக்கப்படுத்துகிறது; அவர் அந்த படைப்பின் மீது ஒரு ஆழ்ந்த நாட்டதை அனுபவிக்கின்றார்; இது அவரை அந்த அனுபவத்தின் ஒரு வகையை தமது மொழியில் உருவாக்கத் தூண்டுகின்றது. ஆனால் அவர் மூலக்கவிதையின் மொழியியல் மற்றும் உரைக் கட்டமைப்பில் உள்ள பொருளை மட்டும் சேகரிப்பவரோ அல்லது வெறுமனே உரையின் புறக் குறியீடுகளைப் பொருள்கோள் செய்பவரல்ல. மொழிபெயர்ப்பாளர் மூலக் கவிஞரின் கருத்துக்களை நம்பிக்கையாக வழங்குவதற்கு முயற்சிப்பதால் மொழிபெயர்ப்பானது மூலப் படைப்பின் தன்னிச்சையான தன்மையிலும் சக்திலும் குறைபாடு உடையதாய் இருக்கின்றது என்ற மொழிபெயர்ப்புக்கு எதிரான மிகப்பழமையான விமர்சனம் உள்ளது. எந்த மனிதனும் மற்றொரு மனிதனின் எண்ணங்களை சிந்திக்கவோ அல்லது மற்றொரு மனிதனின் உணர்வுகளைச் சரியாகவும் முழுமையாகவும் உணவோ இயலாது என்பது உண்மைதான்; ஆனால் இதை ஒரு மொழிபெயர்ப்பாளரிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை. ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளரிடம் இருக்க வேண்டிய அடிப்படை தகுதி, அவர் ஒரு

இலக்கியப்படைப்பை அதன் விவேகமான வாசிப்புக்கு இயலும்படிக்கு செய்ய முயலவேண்டும். கற்பனை முற்றிலும் இல்லாத துல்லியம் நாடும் வெறியர்களால் செய்யப்படும் போது கவிதை மொழிபெயர்ப்பு கோரமாகும். ஆனால் படைப்பாற்றலின் அழகையும் புத்துணர்ச்சியும் மீண்டும் ஒருமுறை கொண்டுவருமாறு கவிதையைப் பொருள்கோள் செய்யும் ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டால் அது மூலக் கவிதையின் ஒரு நல்ல மாற்றாக இருக்க இயலும். ஒரு கவிஞருக்கு மிகத் தேவையான அளவுகோல்கள் கவிதையின் மொழிபெயர்ப்பாளர்கள் கொண்டிருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு ஒரு மொழிபெயர்ப்பு என்பதால் இரண்டாவதாகச் சிறந்தது என ஒரு மொழிபெயர்ப்பை மதிப்பிடுவதில் எந்த பலனும் இல்லை. பின்வரும் மொழிபெயர்ப்பை மூலக்கவிதையுடன் ஒப்பிடுகையில் மேற்சொன்ன கூற்றுகளின் உண்மை தெளிவாகும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத் தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!	Tamil too is called the ambrosia! That, the lovely Tamil, is as precious as our life Tamil is called the moon! That, the lovely Tamil, is the water to our society's growth!

2.5. தனிப்பட்ட பண்புகளை மொழிபெயர்ப்பதில் சிக்கல்

ஒரு கண்டிப்பான தனிப்பட்ட அல்லது மொழி அடிப்படையிலான கவிதை மொழிபெயர்ப்புகளை அனுமதிக்காது; பெரும்பாலும் அதற்கு மொழிபெயர்ப்பு தேவைப்படாது.

'இனப்பெயர் ஏன்' என்று பிறனெனைக் கேட்டால்
மனத்தில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்
'நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!
'முன்னாள்' என்னும் பன்னெடுன் காலத்தின்
உச்சியில் 'திராவிடன்' ஒளிசெய் கின்றான்.

2 .6. மூலத்திற்கு நம்பிக்கையாக இருப்பதில் சிக்கல்

ஒரு தமிழ் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது மொழியின் கட்டமைப்பில் சில சமரசங்கள் செய்வதன் மூலம் தகவல் இழப்பு, மிகைப் பொதுமையாக்கம், குறைப் பொதுமயாக்கம், உணர்ச்சி வேகம் மற்றும் உணர்ச்சி தாக்கத்தை இழத்தல் போன்றவை மொழிபெயர்க்கப்படும் பதிப்பில் வெளிப்படுத்தப்படும்.

தமிழ்	ஆங்கிலமொழிபெயர்ப்பு
இருளின் பகலாடை இரவாடை விண்முதல் மண் வரைக்கும் வியக்கும் உன் மேனி தனைக் கண்ணிலே காண்பேன்: நீயோ அடிக்கடி உடையில் மாற்றம் பண்ணுவாய் இருளே உன்றன் பகல் உடை தங்கச்சேலைமேல் வேலைப்பா டென்ன சொல்வேன்!	Admire I your body Spreading from earth to sky Alter you your apparel So often O darkness! Gold saree your diurnal Dress is; O what filigree Work on the white silk on Your nocturnal saree!

3. முடிவு

நாம் படிக்கிற கவிதைகளில் நிறைவு இருக்க இயலாது; அது கவிஞரின் பார்வை மட்டுமே. உண்மையான கவிதைகள் பிறக்கக் காத்திருக்கின்றன. கவிஞர் தன் அக இன்னிசையையும் தனது பார்வையின் தனித்துவத்தையும் வெளிப்படுத்தும் போது அல்லது சொற்களால் மொழிபெயர்க்கும் போது கவிதை அதன் அழகை அதிகமாக இழக்கிறது. மொழிபெயர்ப்பாளர் மற்றொரு ஊடகத்தில் மற்றொருவரின் பார்வையை வெளிப்படுத்தும் போது மூலக் கவிதையின் பார்வை முரண்பாடாக இருக்கும்.

ஒரு ஆசிரியர் தனது படைப்பை உருவாகிய உடனேயே இறந்து விடுகிறார்; பொருள்பொதிந்தவைகள் இல்லை குறிப்பான்கள் தான் இருக்கும் என டெரடா கூறுகிறார். நாம் அவரை ஏற்றுக்கொண்டால், மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தி

மூலத்தை மறு உருவாக்கம் செய்வது கேள்விக்குரியது; ஆனால் மொழிபெயர்ப்பு மற்றொரு மொழியில் கூறப்பட்டுள்ளதை பொருள்கோள் செய்கின்றது எனலாம். உண்மையான மொழிபெயர்ப்பு இருக்க இயலாது, ஆனால் மொழிபெயர்ப்பு உருவாக்கங்கள் இருக்க இயலும். நாம் டெரடாவை ஏற்றுக்கொண்டால், பின்வரும் கேள்விகள் பொருத்தமற்றதாக இருக்கும். ஒவ்வொரு மொழிபெயர்ப்பையும் மூலத்தை வேறு மொழியில் மொழிபெயப்பது என்று கருதாமல் ஒவ்வொரு புதிய படைப்பகாக கொள்ளவும்.

1. மூலத்திலிருந்து மொழிபெயர்ப் சுதந்திரமாக இருக்கவேண்டுமா அல்லது மூலத்திற்கு நம்பிக்கையானதாக இருக்கவேண்டுமா?

2. மொழிபெயர்ப்பானது கலையா அறிவியலா திறனா?

3. மொழிபெயர்ப்பு மூலத்தைப் போன்று இருக்கவேண்டுமா அல்லது மொழிபெயர்ப்பைப் போன்று இருக்க வேண்டுமா?

4. மொழிபெயர்ப்பு வெளிநாட்டு மொழியில் இருக்கவேண்டுமா அல்லது தாய்மொழியில் இருக்க வேண்டுமா?

5. மொழிபெயர்ப்பு உள்ளுயிர்ப்பின் விளைவா அல்லது மனோபலத்தின் விளைவா?

6. மொழிபெயர்ப்பு மூலத்தின் காலத்தையும் கலாச்சாரத்தையும் பிற பண்புக்கூறுகளையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமா வேண்டாமா? அல்லது காலம், நடை, பண்பாடு முதலியவற்றைப் பிரதிபலிக்க வேண்டுமா?

7. மொழிபெயர்ப்புத் தரத்தை மதிப்பிடுவதற்கு ஏதேனும் மாதிரியின்றி இல்லாத நிலையில் மொழிபெயர்ப்புகளை மதிப்பீடு செய்யலாமா?

ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் ஒரு புதிய படைப்பு என்று கருதப்படுவதால் மொழிபெயர்ப்பின் தரத்தை மதிப்பீடு செய்வது பற்றிய கேள்வி எழவில்லை, அதைத் தர மதிப்பீடு செய்வதற்கு பதிலாக மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகளின் ஒரு பகுப்பாய்வு மட்டுமே செய்ய முடியும்.

BIBLIOGRAPHY

Bharathidasan. 1994. paaratitaacan kavitaikaL. Cennai: maNivaacakar patippakam.

Bharathidasan:Selected Poems. 1996. Pondicherry: Pondicherry Institute of Linguistics and Culture.

Catford, J.C. 1965. A Linguistic Theory of Translaion. London: Oxford University Press.

Chalapathy. 1987. Tranquility. Madras: Apollo Velyyeedu.

Davie, Donald. 1975. Poetry in translation. Milton Kevnes: The Open University Press.

Murugan, V. 1994. Selected Poems of Bharathidasan. Madras: International Institute of Tamil Studies.

Newmark, Peter. 1981. Approaches to Translation. Oxford: Pergamon Press.

Nida, E.A. 1975. Language, Structure, and Translation. Stanford: Sanford University Press.

Parameswaran, P. 1984. Puratchi Kavignar Bharathidasan's Smile of Beauty. Pondicherry: Koo.Amutavalli "Paaratitaacan Kuyil".

Ramalingam, M. 1991. Selected Poems of Bharathidasan. Tiruchirapalli: Bharathidasan University.

Thangappa, 1992. Select Poems of Bharathidasan. Madras: Marxist Periyarist Communist Party.